சன்மார்க்க சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

சன்மார்க்க சபை
மேலைச்சிவபுரி – 622403
புதுக்கோட்டை மாவட்டம்

சன்மார்க்க சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

முனைவர் பழ. சிதம்பரம்
முனைவர் ந. முருகேசபாண்டியன்

சன்மார்க்க சபை
மேலைச்சிவபுரி – 622403
புதுக்கோட்டை மாவட்டம்

நூல் விவரம்

நூலின் பெயர்	:	**சன்மார்க்க சபையின் தோற்றமும் வளர்ச்சியும்**
ஆசிரியர்கள்	:	முனைவர் பழ. சிதம்பரம்
	:	முனைவர் ந. முருகேசபாண்டியன்
பொருள்	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு ஆகஸ்ட் 2004
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்து	:	10 புள்ளிகள்
பக்கம்	:	20
தாள்	:	21 . 2 எஸ்.எஸ்.மேப்லித்தோ
கணினிவடிவமைப்பு	:	முத்து அச்சகம், பொன்னமராவதி.

91/4

சன்மார்க்க சபை நிறைவேற்றுக் கழகம்

தலைவர்	: திரு **சா. அண்ணாமலை செட்டியார்**
துணைத்தலைவர்	: திரு **சி. சொக்கலிங்கம்**
செயலர்	: திரு **ப. சா. சிங்காரம்**
துணைச்செயலர்	: திரு **வி. பழநியப்பன்**
பொருளாளர்	: திரு **அ. சுவாமிநாதன்**
உறுப்பினர்கள்	: திரு **சி. நாகப்பன்**
	: திரு **அ. சிதம்பரம்**
	: திரு **இராம. சொக்கலிங்கம்**
	: திரு **சி. முத்தையா**
	: முனைவர் **கதி. தியாகராசன்**
	: முனைவர் **ந. இராமாயி** முதல்வர் (பொ) பதவி வழி உறுப்பினர்

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி - கல்லூரிக்குழு

தலைவர்	: முனைவர் **வி. பழநியப்பன்**
செயலர்	: திரு **சி. நாகப்பன்**
உறுப்பினர்கள்	: திரு **ப. சா. சிங்காரம்**
	: திரு **முரு. விசுவநாதன்**
	: திரு **பழ. கண்ணன்**
	: திரு **சி. சாமிநாதன்**
	: திரு **லெ. நாராயணன்**
	: முனைவர் **ந. இராமாயி** முதல்வர் (பொ) பதவி வழி உறுப்பினர்
	: முனைவர் **பழ. சிதம்பரம்** எம். ஏ., பிஎச்.டி., ஆசிரியர் சார்பாளர்
	: திரு **க. அரங்கநாதன்** எம். ஏ., ஆசிரியர் சார்பாளர்
	: திரு **வெ. முருகேசன்** அலுவலர் சார்பாளர்

மாலை நேரக் கல்லூரி

தலைவர்	: திரு **வி. முருகப்பன்**
செயலர்	: திரு **ப. சா. சிங்காரம்**
உறுப்பினர்கள்	: திரு **சி. சொக்கலிங்கம்**
	: திரு **அ . சாமிநாதன்**
	: திரு **சி. முத்தையா**

சபைத் தோற்றம்

செய்ய சவுமியத்திற் சித்திரைமுப் பானொன்றிற்
றுய்யகுரு வார சுபதினமே – வையத்திற்
சேமமுறு மேலைச் சிவபுரியிற் சன்மார்க்க
நாம அவைநிறுவு நாள்.

ஆயிரத்துத் தொள்ளா யிரத்தொன்ப தாங்கிலவாண்
டேயுமதி மேபதிமூன் றேய்தினமே – யாயறிஞர்
சன்மார்க்க மென்னுஞ் சபைநிறுவிச் சைவமெனு
நன்மார்க்க மோர்ந்ததிரு நாள்.

சன்மார்க்க சபையின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்தில் சங்க காலம் முதல் பல்வேறு சங்கங்களும் அமைப்புக்களும் தோன்றித் தமிழர்களின் கலை, இலக்கியம், சமயம், அரசியல், பொருளியல் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறுவப்பெற்ற சங்கங்களின் வரிசையில் முதன்மையாக எண்ணத்தக்கது மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை. முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் பாரியின் பறம்பு நாட்டிற்குட்பட்டதும், அவன் இரவலர்க்கு அன்பளிப்பாக வழங்கிய முந்நூறு ஊர்களில் ஒன்றெனக் கருதத்தக்கதுமான சிற்றூர் மேலைச்சிவபுரி. இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில் அமைந்துள்ளது.

சபையின் தோற்றம்

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஆளுகைக்குட்பட்ட மேலைச்சிவபுரியில், நகரத்தாரிடையே, சிறப்புப்பெற்று விளங்கிய குடும்பம் வ.பழ.சா.குடும்பம். இக்குடும்பத்தில் தோன்றிய சாமிநாதன் செட்டியாரின் மக்கள் வ.பழ.சா. பழநியப்பச் செட்டியார், வ.பழ.சா.அண்ணாமலை செட்டியார். இவர்கள் வணிகத்தில் சிறந்து விளங்கியதுடன் இறைபக்தியும், கொடைக்குணமும், புலவர்களிடம் பேரன்பும், பிற உயர் குணங்களும் மிக்கவர்கள். இவர்களுடைய கெழுதகை நண்பர் மகிபாலன்பட்டியைச் சார்ந்த பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார். இவர் சைவமும் தமிழும் வளர்தற்கு ஒரு சபைதனை நிறுவவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார். அக்கருத்தை வள்ளல் பெருமக்கள் ஏற்றனர். வானம் பார்த்த பூமியாக வறண்டிருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபையினை நிறுவினர். பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் முதற்கூட்டத்திற்குத் தலைமை ஏற்றார். திருமகள் செழித்து வளரும் செட்டிநாட்டில் முதன்முதலாகத் தோன்றிய சன்மார்க்கசபையின் செயற்பாடுகளினால் கலைமகளும் செல்வாக்குப் பெற்றாள்; அறிவுப் பயிர் வளர்ந்தது.

பெயரமைப்பு

சன்மார்க்கம் என்ற சொல்லுக்கு உண்மை வழி அல்லது நன்னெறி என்பது பொருளாகும். சைவ சமயம் மட்டுமே உயிர்களைப் பரம்பொருளிடத்துச் சேர்க்கும் தன்மையுடையதால், அது சன்மார்க்கம் என்ற பெயருக்கு உரிமையுடையதாகும். சமய மெய்மைகளையும் ஒழுக்க வகைகளையும் அறிவுறுத்தற்காக நிறுவப்பட்டமையினால் சன்மார்க்க சபை என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது.

சபையின் குறிக்கோள்கள்

1. சபை "சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக" என்னும் கொள்கை வழிநிற்றல்
2. தமிழ்க் கல்லூரி வழி தமிழ் மொழியினை வளமுறச் செய்தல்.
3. தமிழ்ப் புலமையிற் சிறந்திருக்கும் தமிழ்ப் புலவருக்குச் சிறப்புப் பட்டம் வழங்குதல்.
4. தமிழ் நூல், உரை, ஆராய்ச்சியுரை முதலியன வெளியிடுதல்.
5. பிற மொழிகளிலுள்ள அரிய நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல்.
6. நூலகம் அமைத்து மக்களின் அறிவுத் திறனைப் பெருக்குதல்.
7. சைவ சமயக்குரவர்கள்நால்வர் திருநாட்களிலும் காரைக்கால் அம்மையார் திருநாளிலும் குருபூஜை செய்தல்.
8. அறிஞர்கள் பலரை அழைத்துச் சமயத் தத்துவங்கள், தமிழ் வளர்ச்சி பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்.
9. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் தருதல்.

சபையின் செயல்பாடுகள்

தமிழகத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பின்தோன்றி, விரைவில் நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கும் சன்மார்க்க சபை, தமிழ்ப்பணி, சமயப் பணி, கல்விப்பணி ஆகிய மூன்று நிலைகளிலும் சமுதாயத்திற்குப் பெருந்தொண்டாற்றி வருகிறது. சமுதாய மேம்பாட்டிலும் தமிழ் வளர்ச்சியிலும் அக்கறை கொண்ட சபை, தீர்மானங்கள் நிறைவேற்றுதல், சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல், கல்வி நிறுவனங்கள், நூலகம் நடத்துதல், தமிழ் நூல்கள் வெளியிடுதல் என்று புரவலராகப் பணிகளைச் செய்து வருகிறது.

சன்மார்க்க சபை தோன்றியபோது தமிழகத்துக் கழகங்கள் என இருந்தவை சில. அவற்றுள்ளும் தமிழ் வளர்ச்சியினைக் குறிக்கோளாகக் கொண்டவை மிகச் சிலவே. அரசின் ஆதரவும் கல்வித் துறையின் சார்புமின்றித் தமிழ், தமிழகத்திலும் புகலிடம் இழந்த காலம் அது. இந்நிலையில் தமிழ் மேம்பாடு அடையச் சன்மார்க்க சபை உருவாகி வளர்ந்து, தமிழ் வரலாற்றில் மைல் கல்லாக விளங்குகின்றது. சன்மார்க்க சபையின் செயல்பாடுகள், இது போன்று பல்வேறு சபைகளும் கல்வி நிறுவனங்களும் தமிழகமெங்கும் ஏற்படத் தூண்டுகோலாக விளங்கின.

சபையின் தீர்மானங்கள்

தமிழ் மொழி வளர்ச்சியடைந்திடக் காலந்தோறும் அவ்வப்போது சபையினர் கூடி, தீர்மானங்களை நிறைவேற்றி, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியுள்ளனர். அத்தீர்மானங்களைத் தமிழ்கூறும் நல்லுலகில் நன்மதிப்பைப் பெற்றுள்ளன.

தமிழ் உயர் தனிச் செம்மொழியாகக் (Classical Langugage) கருதப்பட வேண்டுமெனவும், அது ஐ.சி.எஸ். தேர்வுக்குப் பாடமாக்கப்பட வேண்டுமெனவும் 1918இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசப் பிரதிநிதிக்கும் சென்னை மாநில ஆளுநர்க்கும் கல்கத்தா, சென்னை, பம்பாய், அலகாபாத், காசி, பஞ்சாப் முதலிய பல்கலைக் கழங்களுக்கும் அனுப்பப்பெற்றுள்ளன.

சிதம்பரத்தில் ராஜாசர் மு.அ.அண்ணாமலை செட்டியார் அவர்களால் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் ஒரு தீர்மானமும், அப்பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று மற்றொரு தீர்மானமும் 1929–இல் நிறைவேற்றப்பெற்றுள்ளன.

1932–இல் புதுக்கோட்டை நகரில் தமிழ்க் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென மாமன்னரைக் கேட்டுக்கொள்ளும் வகையில் தீர்மானம் இயற்றப் பெற்றுள்ளது.

1932–இல் விபுலானந்த அடிகள் தலைமையில் தமிழ் வளர்ச்சியைக் கருதிச் சபை நிறைவேற்றிய எட்டுத் தீர்மானங்களும் மிகவும் இன்றியமையாதவை. அவற்றுள் சில:

(V) சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார்களை அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் வடமொழிச் சிரோமணி வகுப்புகளுக்கு ஒப்பத் தமிழிலும் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம், சோதிடம் முதலிய பிரிவுகளையும் ஏற்படுத்தி நடத்தும்படி இச்சபையார் வேண்டிக் கொள்கின்றனர்.

(VII) பள்ளி இறுதித்தேர்வுகளுக்குத் தமிழ் கட்டாயப் பாடமாக இல்லாமலிருப்பதால் மாணவர்களிற் சிலர் முதல் பருவத்திலேயே தமிழை விடுத்துப் பிற மொழிகளைப் படிப்பதால் அவர்களது தமிழறிவு குறைந்து வருவது வருந்தத் தக்கதாயிருக்கிறது என்பதையும் முன்போல் தமிழ் ஒரு பகுதியாவது கட்டாயப்பாடமாக ஏற்படுத்த வேண்டும் என்பதையும் இச்சபை தெரிவித்துக் கொள்கிறது.

(VIII) தமிழ் மொழியை வளர்ப்பதற்கு முயன்றுவரும் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும்படியும் ஆண்டுதோறும் ஒவ்வோரூரில் தமிழ் மகாநாடு கூடிச் சங்கங்களின் உறுப்பினர்களை அனுப்பித் தமிழ் வளர்ச்சிக்குரிய பல முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் வழிகளில் முயலும்படியும் இச்சபையார் கேட்டுக் கொள்கின்றனர்.

1937–இல் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதால் தமிழ் வளர்ச்சிக்குக் கேடு ஏற்படுவதாக, அதனைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றுள்ளது.

1942–இல் தமிழிசை குறித்துச் சபையினர் இயற்றிய பின்வரும் தீர்மானம் குறிப்பிடத்தக்கது.

"தமிழ்நாட்டில் தமிழ் மக்களால் நடத்தப்பெறும் எல்லா இசையரங்குகளிலும் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே இசைப் பாடல்கள் பாடப் பெற வேண்டுமென்று இச்சன்மார்க்க சபை தீர்மானிக்கின்றது."

1943—இல் "ஸ்ரீ", "வித்துவான்" ஆகிய சொற்களுக்குப் பதிலாக முறையே "திரு", "புலவர்" என்ற தமிழ்ச்சொற்களை ஆளுதல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறது.

1947—இல் சபை, தமிழ்ச் சொற்கள் குறித்து அரசுக்கு அனுப்பிய பின்வரும் தீர்மானம் கலைச்சொல் ஆக்கத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது.

"சென்னைத் தமிழறிஞர் கழக ஏழாவது வெளியீட்டின்படி இதுவரை வெளிவந்த கலைச் சொற்களெல்லாம் தூய தமிழ்ச் சொற்களா என்ற ஒரு நோக்கம் கொண்ட ஒரு குழுவை விரைவில் அமைத்தல் வேண்டும் என்றும் இனிவரும் நூல்களில் எல்லாம் அவற்றையே கையாளும் கட்டாய விதியை அரசினர் விதித்தல் வேண்டும் என்றும் முப்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழ்ப் பணியாற்றி வரும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை கேட்டுக்கொள்கிறது".

தமிழ் வளர்ச்சிக்கான தீர்மானங்களை நிறைவேற்றுவதுடன், தமிழறிஞர்கள் மன்னர்கள், சபையினர் மறைவின்போது, சபை கூடி இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

சொற்பொழிவுகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்வியறிவு பரவலாக வளர்ச்சியடையாத நிலையில், சொற்பொழிவுகள் மூலம் பரந்துபட்ட மக்களிடம் தமிழ் பரப்ப சபை மேற்கொண்ட முயற்சிகள் தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். "கற்றிலனாயினும் கேட்க" "கற்றலிற் கேட்டல் நன்று" என்ற அறிவுரைகள் சபையாரின் நெறிக்கு வழிகாட்டின. பண்டை நாளில் சபை விழாக்கள் மூன்று நாட்கள் நடைபெறும். அப்பொழுது போக்குவரத்து, தகவல் தொடர்பு வசதிகள் மிகவும் குறைவு. இந்நிலையிலும் சபையினர் தமிழார்வமிகுந்த தமிழறிஞர்களைத் தொடர்புகொண்டு, அவர்களைச் சபைக்கு வரவழைத்துச் சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்தனர். சபையின் அழைப்பினையேற்றுச் சொற்பொழிவுகள் நிகழ்த்து வதைத் தமிழறிஞர்கள் பெருமையாகக் கருதினர். இத்தகைய சொற்பொழிவைக் கேட்க மாட்டு வண்டிகள் மூலமாகவும், நடந்தும் ஏறக்குறைய 1500 மக்கள் பல திசைகளிலிருந்து வந்து கூடினர் என்பது வியப்புத்தரும் தகவலாகும். சொற்பொழிவைக் கேட்க வந்தோர்க்குச் செவிவிருந்தும், அறுசுவை விருந்தும் அளிப்பர் சபையார். ஆண்டு விழாக்கூட்டங்கள் அன்றித் திங்கள்தோறும் சொற்பொழிவுகள் நிகழும். இங்ஙனம் பல்லாண்டுகள் கேள்வி வாயிலாகத் தமிழினைப் பரப்பிற்று இச்சபை. செட்டிநாட்டு வட்டத்தில் தமிழ் வளமும் தமிழிலக்கியச் சிறப்பும் பெருகியமைக்குச் சன்மார்க்க சபையில் நடைபெற்ற சொற்பொழிவுகள் மூல காரணம் என்பது வரலாற்று உண்மை.

கல்விப்பணி

"ஆயிரம் அன்ன சத்திரங்கள் அமைத்தலில் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று" என்பது தமிழ்க் கவிஞர் பாரதியாரின் வாக்கு. இளம் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு முறையான கல்வி பயிற்றுவித்தல் அடிப்படையானது என்பதைக் கருத்தில் கொண்ட சபையினர் "ஸ்ரீ கணேசர் செந்தமிழ் வித்தியாசாலை" என்ற கல்வி நிறுவனத்தைச் சபை தொடங்கிய 1909 ஆம் ஆண்டிலேயே நிறுவினர். சபையின் தலைவர் வ. பழ. சா. பழனியப்ப செட்டியார், பள்ளியின் ஆசிரியர்களுக்குரிய மாத ஊதியத்தினை மாதந்தோறும் சொந்தப் பணத்திலிருந்து வழங்கி வந்தார். கல்விப் பணியை வித்தியாசாலைத் தருமம் என்றும் அது சபைக்கு உயிர் நிலையானது என்றும் சபையின் முதலாமாண்டு அறிக்கைப் பத்திரம் (1910) குறிப்பிட்டுள்ளது. பாலர் வகுப்பு முதல் சிறு வகுப்புகள் நடைபெற்றன. மாணவர்களுக்குக் கட்டணம் ஏதுமில்லை. கற்பலகைகள், பாடநூல்கள், எழுது நூல்கள் முதலியன மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பெற்றன. பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பெருகிற்று. ஆசிரியர் ஊதியம் முதலான அனைத்துச் செலவுகளையும் சபையே பல்லாண்டுகள் ஏற்றுக்கொண்டது. இத்தொடக்கபள்ளியில் கசடறக் கல்வி கற்றதனால், பலர் தங்கள் வாழ்க்கையில் உயரிய நிலை அடைந்துள்ளனர்.

சிற்றிலக்கண இலக்கியங்களைப் பொதுவாக மாணவர்களுக்குப் பாலர் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரை கற்றுக்கொடுத்து வந்த சபை, ஏழாம் வகுப்பிற்குப் பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் ஆகிய வகுப்புகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்தது. கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பொருளியல் இடையூறு ஏற்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தால் சபை உதவித்தொகை வழங்கியது. தொலைவிலிருந்து வந்து பயிலும் மாணவர்கள் தங்கிட இலவச இட வசதி அளித்தது. மாணவர்கள் பிறமொழி அறிவு பெற வேண்டுமென்ற நோக்கில் வடமொழியும், ஆங்கிலமும் கற்பிக்கப் பெற்றன. மதுரைத் தமிழ்ச்சங்கப் பாடவகுப்புகள் இருபத்து மூன்று ஆண்டுகள் நடைபெற்றன.

சபையின் நிறுவனர்கள்

சன்மார்க்க சபையின் நிறுவனத் தலைவராக விளங்கிய வ.பழ.சா.பழநியப்பச் செட்டியார், மக்களுக்குத் தொண்டாற்றுவதில் மனம் மகிழ்ச்சி அடைபவர். எப்பொழுதும் அவரைச் சுற்றிப் புலவர் பெருமக்கள் சூழ்ந்திருப்பர். பண்டிதமணியின் ஆலோசனையின்பேரில், அவரது இளவல் வ.பழ.சா.அண்ணாமலைச் செட்டியார் உதவியுடன் சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தார். வள்ளல் பெருமக்கள் இருவரும்

சபையின் நிருவாகத்திற்கெனப் பெரிய கட்டடம் கட்டியதுடன் ஸ்ரீ கணேசர் செந்தமிழ் வித்தியாசாலை என்ற கல்வி நிறுவனத்தையும் நிறுவினர். அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்தனர். அவற்றைக் கேட்க வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவும் ஏற்பாடு செய்தனர். வ.பழ.சா.பழநியப்ப செட்டியார், சபை தொடங்கிய இரு ஆண்டுகளில் உடல் நலம் குன்றினார். அப்பொழுது அவரது தம்பி அண்ணாமலையாருக்குச் "சன்மார்க்க சபையைத் தளரவிடாது எப்பொழுதும் நீடித்து நடத்தி வருக" என்ற குறிப்பு எழுதிவைத்துவிட்டுச் சிறிது காலங் கழித்து மறைந்தார். அவருக்குப்பின் வ.பழ.சா.அண்ணாமலைச் செட்டியார் சபையின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இச்சபைக்கு நிலையான மூலதனம் சேகரித்து நிரந்தர வைப்பில் வைக்க முயன்று வெற்றி பெற்றார். பண்டிதமணியாருடன் தொடர்பு கொண்டு சபையின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டார். சபையின் தொடக்க காலத்தில் ஏ.இராமநாதன் செட்டியார், மு.கு.குமரப்பசெட்டியார் சபையின் செயலர்களாகச் சிறப்புறப் பணியாற்றினர்.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரி

மாணவர்களின் நலனுக்காகச் சபையினரால் தோற்றுவிக்கப்பெற்ற கணேசர் செந்தமிழ்க் கல்லூரி என்ற கல்வி நிறுவனம், தமிழகத்தில் நிறுவப்பட்ட இரண்டாவது தமிழ்க் கல்லூரி ஆகும். இக்கல்லூரி கால மாறுதலுக்கேற்ப 1938 ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைவுபெற்றது. அப்பொழுது "வித்துவான்" வகுப்புகள் தொடங்கப்பெற்றன.

பால பண்டிதக் கல்வி நிலையிலிருந்து வித்துவான், புலவர் என்ற பட்டயமாக மாற்றம்பெற்று, 1975–ஆம் ஆண்டில் பி.லிட்., பட்டம் என்ற ஏற்றம்பெற்றது.

1982 ஆம் ஆண்டு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

1987–ஆம் ஆண்டில் முதுகலைத் தமிழ்ப்படிப்பும், 1991–ஆம் ஆண்டில் எம்ஃபில் (தமிழ்) படிப்பும், 2003–ஆம் ஆண்டில் தமிழ் உயராய்வு மையமும் (பிஎச்.டி.,) தொடங்கப் பெற்று நடைமுறையில் உள்ளன.

கால வளர்ச்சிக்கேற்பச் சமூக மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, சபை தமிழ்க் கல்வியுடன் பிறதுறைக் கல்விகளையும் வழங்கிடத் திட்டமிட்டது. 1994–ஆம் ஆண்டில் மாலை நேரக் கல்லூரி தொடங்கப்பெற்றது. பி.எஸ்சி (கணிதம்), பி.காம், பி.காம் (வங்கி மேலாண்மை), பி.எஸ்.சி.,(கணினி), பி.ஜி.டி.சி.ஏ., வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தற்பொழுது கல்லூரியில் சுமார் 600 மாணவமாணவியர்கள் கல்வி பயிலுகின்றனர்.

மழலையர் பள்ளி முதல் முனைவர் பட்டம் வரை கல்வியை விரிவடையச் செய்து, எல்லோரும் பயன்பெறும் வகையில் திட்டமிட்டிருப்பது, சபையினரின் கல்வித் தொண்டிற்குச் சிறந்த சான்றாக உள்ளது.

வெளியூர்களிலிருந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கு நாகப்பா மாணவர் இல்லமும், மாணவியருக்கு இராமசாமி மாணவியர் இல்லமும் அனைத்து வசதிகளுடன் செயற்பட்டு வருகின்றன.

சபையும், கல்லூரியும் தமிழகமெங்குமிருந்து அறிஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றன. மேலும் கருத்தரங்குகள், பயிலரங்குகள், பயிற்சி முகாம்கள் முதலியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன. இதனால் மாணவ-மாணவியர் கற்றலுடன் பல்துறை அறிவு பெறுகின்றனர்.

கல்லூரியில் பயின்ற மாணவமாணவியர்கள் தமிழகம் மட்டுமின்றி இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பேராசிரியர்களாகவும் பிறதுறை வல்லுநர்களாகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடக்கப்பள்ளி

சபை தொடங்கப்பெற்ற ஆண்டில் (1909) மாணவமாணவியருக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க ஏற்படுத்தப்பெற்ற தொடக்கப்பள்ளி, 1955 ஆம் ஆண்டு முதல் தனியான வளர்ச்சியில் இயங்கிவருகிறது. கட்டடம் கட்டுவதற்காகப் பகுதி நிதியாக ரூ. 4500/- திருமதி சித.சேதுக்கரசி ஆச்சி வழங்கினார். ஏனைய தொகையைச் சபையே ஏற்றுக் கொண்டது. விரைவில் நூற்றாண்டு கொண்டாடவிருக்கும் கணேசர் செந்தமிழ்த் தொடக்கப்பள்ளி, பொன்னமராவதி வட்டாரத்தில் மிகவும் தொன்மையானது, இப்பள்ளி தந்த கல்வியினால்தான் தங்கள் வாழ்க்கை வளமடைந்ததாகச் செம்மல் வ.சுப.மாணிக்கனார் போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். தற்பொழுது சுமார் 500 மாணவ மாணவியர்கள் கல்வி கற்கின்றனர்.

உயர்நிலைப்பள்ளி

மேலைச்சிவபுரி கிராமத்தில் உயர்நிலைப்பள்ளிக் கூடம் அமைத்து, மாணவ மாணவியர்கள் பயன்பெற வேண்டுமென நினைத்த சபை, ஒரு குழு அமைத்துப் பெரும்முயற்சி செய்து 1967 – ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியைத் தொடங்கி வைத்தது. தமிழக அரசு உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்குப் ப.சா. குடும்பத்தார் ரூ.10,000/- தொகையை அரசாங்கத்திற்குச் செலுத்தி, உயர்நிலைப்பள்ளி தொடங்கிடப் பெறும் உதவி புரிந்தனர். 1989 ஆண்டு மேல்நிலைப்பள்ளியாக மாற்றமடைந்தது. இப்பள்ளியினால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் கல்வி வசதி பெறுகின்றனர்.

மழலையர் பள்ளி

ஆங்கில வழிக் கல்வி மூலம் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் பெற்றோர்கள் மோகம் கொண்டுள்ள காலத்தில், தாய்மொழியான தமிழ் வழியாகக் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் கல்லூரிக்குழுத் தலைவர்

செம்மல் வ.சுப.மாணிக்கனார் மனதில் தோன்றியது. அவர் தமிழக அரசிடம் விண்ணப்பித்து, அரசு நிதியுதவியுடன் கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளியை 1981–ஆம் ஆண்டு தோற்றுவித்தார். மழலையர்களைச் சிறு மழலையர், முது மழலையர் எனப் பிரித்து, அவர்களுக்கு விளையாட்டின் மூலம் எண்ணும் எழுத்தும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. தமிழகத்தில் அரசு நிதியுதவி பெறும் மழலையர் பள்ளிகளில், கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியனார் நூலகம்

சபையின் ஓர் அங்கமாக 1910–ஆம் ஆண்டில் தொல்காப்பியனார் புத்தக சாலை எனப்படும் நூலகம் நிறுவப்பெற்றது. தமிழுக்கு இலக்கணம் வகுத்துத் தொல்காப்பியம் என்னும் நூலை எழுதியவர் தொல்காப்பியர் என்பதனை இன்றும் பலர் அறியாத நிலையில், 1910–ஆம் ஆண்டில் அவரைப் போற்றிய சபையின் மொழிப் பற்று பாராட்டிற்குரியது. இந்நூலகமே தொல்காப்பியருக்குத் தமிழகத்தில் முதலாவதாகத் தோற்றம்பெற்ற நினைவகம் ஆகும்.

நூலகத்தில் முதலாமாண்டில் 250 தமிழ், வடமொழி நூற்கள் இருந்தன. சுதேசமித்திரன், செந்தமிழ், ஞானசாகரம், ஞானசித்தர், வித்தியாபாநு, நீலலோசினி முதலிய இதழ்கள் வாங்கப்பெற்றன. "இதனாற் பயனடைவோர் மிகப் பலராவர் என்பதனை நான் எடுத்துக் கூறுவது மிகையாகும்" என்று நூலகத்தினை 1934 ஆம் ஆண்டில் டாக்டர் உ.வே.சா.பாராட்டியுள்ளார்.

தமிழறிஞர்கள் மட்டுமின்றிக் கிராமத்தில் பெரியோர்களும் பயன்பெறும் வகையில் சிறப்பாகச் செயற்பட்டு வந்த நூலகம், தற்பொழுது கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் இணைக்கப்பெற்றுள்ளது. தமிழாய்விற்கு வளம் சேர்க்கும் வகையில் ஆய்வு நூற்களும் ஆய்விதழ்களும் பெருமளவில் சேர்க்கப்பெற்றுள்ளன. தமிழில் ஆய்வினை மேற்கொள்ளும் அறிஞர்களும் ஆய்வுமாணவர்களும் அவ்வப்போது நூலகத்திற்கு வந்து அரிய நூற்களையும் பழைய இதழ்களையும் பயன்படுத்தி வருகின்றனர்.

நூற்கள் வெளியீடு

சபை நிறுவப்பெற்ற காலகட்டத்திலேயே சபையின் நோக்கங்களில் நூற்களை வெளியிட வேண்டுமென்பது முதன்மையான நோக்கமாக கருதப்பெற்றது. பண்டிதமணி எழுதிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சீர்திருத்தம் என்ற நூல் 1911–ஆம் ஆண்டு சபையினரால் வெளியிடப்பெற்றது. தமிழறிஞர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள், இரங்கற்பாக்கள், ஆண்டு அறிக்கைகள் போன்றவற்றைச் சிறு வெளியீடுகளாகப் பதிப்பித்துள்ளது. இவை அன்றைய தமிழகச் சூழலை எடுத்துக் காட்டுகின்றன. சபையின் வெளியீடுகள் பின்வருமாறு:–

ஆண்டு	நூலின் பெயர்	ஆசிரியர் பெயர்
1912	வ.பழ.சா. பழனியப்பச்செட்டியார் மறைவினுக்குச் சன்மார்க்க சபையாரின் அனுதாபத் தீர்மானமும் இரங்கற்பாக்களும்	சபையார் & புலவர்கள்
1923	அங்கயற் கண்ணம்மை பதிகம் & சொக்கநாதர் சிலேடை வெண்பா	குமடமு.குமரப்பச் செட்டியார் + வ.பழ.சா.பழ. சிங்காரவடிவேலன் செட்டியார்
1924	முகவுரைச் சொற்பொழிவு	த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
1925	வ.பழ.சா. அண்ணாமலைச் செட்டியார் மறைவு குறித்த இரங்கற் பாக்கள்.	புலவர்கள்
1927	சன்மார்க்கம்	C.K. சுப்பிரமணிய முதலியார்
1930	சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 25–வது ஆண்டு விழா தலைமைப் பேருரை	பண்டிதமணி
1934	மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை வரலாறு	
1941	உரைநடைக் கோவை I சமயம்	பண்டிதமணி
	உரைநடைக் கோவை II இலக்கியம்	பண்டிதமணி
	மணிமலர்த்திரட்டு	பண்டிதமணி
1944	திருச்சதகம்	பண்டிதமணி
	மணிமலர்த்திரட்டு	பண்டிதமணி
	நீத்தல் விண்ணப்பம்	பண்டிதமணி
1960	சபைக்கட்டுரைகள்	பண்டிதமணி
	திருவெம்பாவை	பண்டிதமணி
1982	பண்டிதமணியின் நாடகத் தமிழ்	ஆ. பழநி
	பண்டிதமணியின் நடைநயம்	இரா.மோகன்
1983	ஊன்றுகோல்	முடியரசன்
	பண்டிதமணியின் பிள்ளைத்தமிழ்	சொ.சொ.மீ.சுந்தரம்
	நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு	
	இலக்கிய நயம்	
	பொருள் நயம்	
	பதிற்றுப்பத்து அந்தாதி	
1968	சபை வரலாறும் வளர்ச்சியும்	

சபை, வெள்ளி விழா (1934), பொன்விழா (1959), வைரவிழா (1970), முத்துவிழா (1999) ஆகிய விழாக்களைக் கொண்டாடியபோது சிறப்பு மலர்கள் அறிஞர்களின் எழுத்தோவியங்களுடன் வெளியிடப் பெற்றுள்ளன.

மொழிபெயர்ப்பு நூல்கள்

தமிழோடு வடமொழியும் ஆங்கிலமும் பயிற்றுவித்த சபை, வடமொழி நூல்களைத் தமிழாக்கி வெளியிடும் முயற்சியைத் தொடங்கியது. பண்டிதமணியாரின் பன்மொழிப் புலமைத் திறத்தினைக் கண்டு 1921–ஆம் ஆண்டு வடமொழியிலிருந்து சுலோசனை என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டது. இந்நூல் தமிழகமெங்கும் பரவலாக வரவேற்புப் பெற்றது. அதனைத் தொடர்ந்து 1924–இல் உதயனசரிதம், 1926–இல் சுக்கிரநீதி, 1934–இல் மண்ணியல் சிறுதேர் ஆகிய நூல்கள் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றன. இன்று சிறப்பிடம் பெறும் மொழிபெயர்ப்புத் துறையின் முன்னோடியாகச் சபையின் செயற்பாடுகள் விளங்கின என்பது இன்றியமையாத் தகவலாகும்.

சபையும் தமிழறிஞர்களும்

சன்மார்க்க சபையினர் மக்களிடையே தமிழைப் பரப்பிட முதன்மையான வழியாகச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தனர். தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் சபையினரால் சிறப்பிக்கப் பெற்றனர்.

சபையில் நடைபெற்ற பல்வேறு சொற்பொழிவுகளில் உரையாற்றவும், ஆண்டு விழாக்களில் தலைமையேற்றிடவும் தமிழறிஞர்கள் சபைக்கு வருகை தந்துள்ளனர். வருகைத் தந்த தமிழ்ச் சான்றோர்களுள் சிலர்:–

1. மு. ரா. கந்தசாமி கவிராயர்
2. மகாகோபாத்தியாய உ. வே. சா.
3. இரா. இராகவையங்கார்
4. கா. சு. பிள்ளை
5. தா. வே. உமாமகேசுவரம் பிள்ளை
6. சி. கே. சுப்பிரமணிய பிள்ளை
7. திரு. வி. கலியாண சுந்தர முதலியார்
8. சுவாமி விபுலானந்தர்
9. மா. இராசமாணிக்கனார்
10. நாவலர் சோமசுந்தர பாரதியார்
11. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

12. பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார்
13. ரா. பி. சேதுப்பிள்ளை
14. ஔவை சு. துரைச்சாமி பிள்ளை
15. மு. வரதராசன்
16. நெ. து. சுந்தரவடிவேலு
17. இராய. சொக்கலிங்கம்
18. ந. மு. வேங்கடசாமி நாட்டார்
19. வ. சுப. மாணிக்கம்

கடந்த நூற்றாண்டில் தடம் பதித்திட்ட தமிழறிஞர்களில் பலரும் சன்மார்க்க சபையில் உரையாற்றியதனைப் பெருமையாகக் கருதினர்.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" எனும் குறள் நெறிக்கேற்ப அறிஞர் பெருமக்களை அழைத்துவந்து சிறப்புரையாற்றச் செய்து படித்தோர் மட்டுமின்றி பாமரரும் பயன்பெறுமாறு செய்தது சபையின் சிறப்பான செயற்பாடு ஆகும்.

கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் மாணவர்களின் நலன் கருதி மாணவர்கள் திறமையை வெளிக்கொணர்வதற்கு மாணவர் நன்னெறிக் கழகம் 1938–ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இன்று தமிழாய்வில் ஈடுபட்டிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்கள் மட்டுமின்றி ஜெயகாந்தன், பிரபஞ்சன் போன்ற பிரபலமான படைப்பாளர்களும் மாணவர் நன்னெறிக் கழகத்தில் சிறப்புரையாற்றி உள்ளனர். சபைக்கும் அறிஞர்களுக்குமான தொடர்பு தொடர்ந்து கொண்டிருப்பதால், மாணவ மாணவியர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

பட்டம் வழங்குதல்

தமிழகத்தில் சிறந்து விளங்கும் நுண்மான் நுழைபுலம் மிக்க அறிஞர் பெருமக்களைப் போற்றும் வகையில் பட்டங்களை வழங்குதலைச் சபை தொடர்ந்து செய்து வருகின்றது. 1925–ஆம் ஆண்டில் டாக்டர் உ. வே. சா. அவர்கள் தலைமையில் இரா. இராகவையங்கார் அவர்களுக்கு "மஹா வித்துவான்" என்ற பட்டமும் மு.கதிரேசஞ்செட்டியார் அவர்களுக்குப் "பண்டிதமணி" என்ற பட்டமும் சபையால் வழங்கப் பெற்றன. இப்பட்டங்கள் தமிழகமெங்கும் பரவிப் பெரும் புகழ் தேடித்தந்தன.

சபை நிறுவப்பெற்று ஐம்பது ஆண்டுகள் நிறைவேறியதை நினைவு கொள்ளும் வகையில், சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற பொன்விழாவில் 1960 ஆம் ஆண்டில் இரா.பி.சேதுபிள்ளை அவர்களுக்குச் "செந்தமிழ்மணி" என்ற பட்டமும் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குப் "பெருந்தமிழ்மணி" என்ற பட்டமும் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்குப் "பண்டிதமணி" என்ற பட்டமும்

மு.அருணாசலம் பிள்ளை அவர்களுக்கு "முத்தமிழ்மணி" என்ற பட்டமும் வழங்கப் பெற்றன.

1970–ஆம் ஆண்டு நடைபெற்ற சபையின் வைரவிழாவில் முனைவர் வ.சுப.மாணிக்கம் அவர்களுக்குச் "செம்மல்" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

1999–ஆம் ஆண்டில் நடைபெற்ற சபையின் முத்துவிழாவில் முனைவர் சுப.அண்ணாமலை அவர்களுக்குச் "செம்மல்" என்ற பட்டமும் ச. மெய்யப்பன் அவர்களுக்குச் "செந்தமிழ்மணி" என்ற பட்டமும் வழங்கப்பெற்றன.

கற்றுத் துறைபோகிய அறிஞர்களைக் கண்டறிந்து அவர்களுடைய தமிழ்ப் பணியைப் பாராட்டும் வகையில் சபையினரால் வழங்கப்பெற்ற பட்டங்கள் சான்றோர்களை ஊக்கப்படுத்தும் மாமருந்து. இதனைத் தொல்காப்பியர், "மாராயம் பெற்ற நெடுமொழி" என்று குறிப்பிடுவர்.

சபையும் பண்டிதமணியும்

தமிழிலும் வடமொழியிலும் புலமைமிக்க பண்டிதமணியின் செவிலிமையினால் சன்மார்க்கசபை பெரும்புகழ் அடைந்தது. சபையின் வளர்ச்சியில் நாளும் ஒத்துழைப்பு நல்கிய பண்டிதமணி, அவர் வாழ்ந்த காலகட்டத்தில் சபையின் மூளையாக விளங்கினார். அவர்தம் புலமையின் செல்வாக்கினால் தமிழகமெங்கும் இருந்து புலவர்களையும் தமிழறிஞர்களையும் அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார். எல்லோருக்கும் இலவசக் கல்வி வழங்கிட சபையினருக்குத் தூண்டுகோலாகப் பண்டிதமணி விளங்கினார். சபையின் வளர்ச்சியுடன் பண்டிதமணியின் புகழும் நாடெங்கும் பரவியது. சபை வழங்கிய பண்டிதமணி பட்டமே அவரது பெயராக நாளடைவில் மாறியது.

பண்டிதமணி எழுதிய நூற்களையும், மொழிபெயர்த்த நூற்களையும் சன்மார்க்க சபை வெளியிட்டது. அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்திலும், அவர்தம் எண்ணம் சன்மார்க்க சபை வளர்ச்சியிலேயே பெரிதும் நாட்டம் கொண்டிருந்தது. சபையில் அவ்வப்போது சொற்பெருக்காற்றி மாணாக்கருக்கு இலக்கண இலக்கியப் புலமையினை ஏற்படுத்தி, அவர்கள் செல்லும் இடமெங்கும் சபைப் பெருமையைப் பரப்பிட வழிவகுத்தார்.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை என்றால் கற்றோர் நெஞ்சில் பண்டிதமணி என்ற பெயர் இன்றும் இயல்பாகத் தோன்றுகிறது. இது சபைக்கும் பண்டிதமணிக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினைக் காட்டுகிறது.

சபையும் வ.சுப.மாணிக்கனாரும்

பண்டிதமணியின் தலைமாணக்கர் வ.சுப.மாணிக்கனார், பண்டிதமணியைப் போன்று சபையின் வளர்ச்சிக்கு இடைவிடாமல் பாடுபட்டார். 1962–ஆம் ஆண்டில் சபைத் தலைவரும் கல்லூரியின் நடைமுறைச் செயலருமான பழ.சிதம்பரம்செட்டியார் அவர்களும் அவரது துணைவியார் திருமதி.சேதுக்கரசி ஆச்சி அவர்களும் செம்மல் வ.சுப.மாணிக்கம் அவர்களும் சபைக்கு நிலையான மூலதனம் சேர்க்கவேண்டுமென மலேயா, சைகோன் முதலிய நாடுகளுக்குச் சென்றனர். மலேயா வாழ் மக்கள் சபையினரை வரவேற்றுப் பெருந்தொகை வழங்கி வாழ்த்தினர். இத்தொகையினால் சபை உரமும் உயர்வும் அடைந்தது. வ.சுப.மாணிக்கனார் கல்லூரிக் குழுத்தலைவராக இருந்து சபையையும் கல்லூரியையும் நெறிப்படுத்தினார். கணேசர் செந்தமிழ்க் கல்லூரி தமிழ்த்துறை வளர்ச்சியடைந்து உயராய்வு மையமாக மாற வேண்டுமென்ற வ.சுப.மாணிக்கனார் கனவு 2003–ஆம் ஆண்டில் நிறைவேறியது.

சபைச் சான்றோர்கள்

வ.பழ.சா. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்குப் பின்னர் வ.பழ.சா.பழ.சாமிநாதச்செட்டியார் சபையின் மூன்றாம் தலைவராக 38 ஆண்டுகள் திறம்படச் செயலாற்றினார். இவர் புலவர்களைச் சபைக்கு அழைத்து, ஆண்டு விழாக்களைப் பெரிய அளவில் நடத்தினார். இவர்தம் காலகட்டத்தில் மாணவர்கள், பாலபண்டிதம், பிரவேச பண்டிதம், பண்டிதம் தேர்வுகளுக்கு அனுப்பப்பெற்றனர். சபையின் உறுப்பான செந்தமிழ்க் கலாசாலை, சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றுக் கல்லூரியாக மாறியது. சபையின் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன், சன்மார்க்க சபையின் வெள்ளி விழா, பொன்விழா போன்ற விழாக்களைச் சிறப்பான முறையில் தமிழகமே வியக்குமாறு நடத்தினார்.

இளவல் அண்ணாமலையாரின் மக்கள் சாமிநாதன் செட்டியார், விசுவநாதன் செட்டியார் ஆகிய இருவரும் சபையின் வளர்ச்சியில் இணைந்து செயல்பட்டனர். வ.பழ.சா.பழ. சாமிநாதஞ் செட்டியாருக்குப் பின்னர் வ.பழ.சா.பழ.சிதம்பரம் செட்டியார் சபையின் நான்காம் தலைவராகப் பொறுப்பேற்றுப் பதினேழு ஆண்டுகள்(1963–1979) செயலாற்றினார். இவர்தம் காலத்தில் சபையும் கல்லூரியும் பெரிய வகுப்பறைகளையும், விடுதிகளையும் பெற்றன.

சபையின் செயலரும் கல்லூரிக்குழுவின் தலைவருமான ஆ.நாகப்ப செட்டியார் அவர்கள் மாணவர்கள் தங்குதற்குரிய மாணவர் இல்லத்தை கட்டித் தந்துள்ளார். மகிபாலன்பட்டி சி. இராம. இராமசாமி செட்டியாரும், சி.இராம.நாகப்ப செட்டியாரும் மாணவியர் தங்குவதற்குரிய விடுதி கட்டுதற்குப் பொருளுதவி

அளித்துள்ளனர். சாமிநாத நிலையம் என்று அழைக்கப்படும் வகுப்பறைகள் கட்டடம் கட்டுவதற்கு வ.பழ.சா.பழ.சாமிநாதன்செட்டியார் குடும்பத்தார் பொருளுதவி அளித்துள்ளனர்.

வ.பழ.சா.பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குப் பின்னர் சபைத் தலைவர்களாகப் பின்வரும் பெரியோர்கள் பொறுப்பேற்றுச் செயலாற்றியுள்ளனர்.

1. அ. விசுவநாதன் செட்டியார் – 1979 – 1981
2. ப. சா. பழநியப்ப செட்டியார் – 1983 – 1991
3. சா.அண்ணாமலை செட்டியார் – 1991 – 1998
4. சித. பழநியப்ப செட்டியார் – 1998 – 2001

1983 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை சபைத் தலைவராகவும் பின்னர் கல்லூரிச் செயலராகவும் பணியாற்றிய ப.சா.பழநியப்பச்செட்டியாரின் சீரிய திறத்தினால் சபை மேன்மேலும் வளர்ந்தது. முனைவர் தமிழண்ணல் அவர்கள் கல்லூரிக்குழுத் தலைவராகச் சிறப்புறச் செயலாற்றினார். இவர்களுடைய காலகட்டத்தில் எம்.ஏ (தமிழ்)., எம்.ஃபில் (தமிழ்) பட்டப்படிப்புகளுடன் மாலைநேரக் கல்லூரியில் பி.எஸ்ஸி (கணிதம்)., பி.எஸ்ஸி (கணினி)., பி.காம் போன்ற கலை, அறிவியல் பட்டப்படிப்புகள் தொடங்கப்பெற்றன. கல்லூரியும் சபையும் வளர்ச்சியடைந்தன.

சபையின் ஏழாவது தலைவரான சா.அண்ணாமலை செட்டியார் அமைதியே உருவானவர். இவரின் செயல்திறத்தினால் சபையின் செயற்பாடுகள் விரிவடைந்தன. தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் உறுதுணையாகத் தற்பொழுதும் அவர்களே ஒன்பதாவது சபைத்தலைவராக இருந்து செயலாற்றி வருகின்றார்.

சபைச்செயலர்கள்

1. வ.பழ.சா.பழ.சிதம்பரம்செட்டியார்
2. ப.சா.பழநியப்ப செட்டியார் 1967–1981
3. ஆ.நாகப்ப செட்டியார் 1981–1982
4. சா. அண்ணாமலை செட்டியார் 1982–1983
5. சித. பழநியப்பசெட்டியார் 1983–1991
6. சி. இராம. நாகப்ப செட்டியார் 1991–
7. வி. பழநியப்பன்
8. ப.சா.சிங்காரம்

தற்பொழுது விசு. பழநியப்பன் அவர்கள் கல்லூரிக்குழுத் தலைவராகவும், ப.சா.சிங்காரம் செட்டியார் அவர்கள் சபையின் செயலராகவும், சி.நாகப்பன் அவர்கள் கல்லூரிச் செயலராகவும் செயலாற்றி வருகின்றனர். இவர்களுடைய காலத்தில் கல்லூரியில் புதிய கட்டடங்கள் கட்டப்பெற்று வருகின்றன. 1909ல் கட்டப்பெற்ற சபைக் கட்டடம் தற்பொழுது எழில்மிகு கட்டடமாக வடிவெடுத்து வருகின்றது. 1999 ஆம் ஆண்டில் சபையின் முத்து விழா மிகவும் பெரிய அளவில் கொண்டாடப்பெற்றது. அப்பொழுது உச்சநீதிமன்ற நீதியரசர் ஏ.ஆர்.லெட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தமிழறிஞர்கள் பலரும் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

சமயப் பணிகள்

சைவமும் தமிழும் தலைத்தினிதோங்குக என்ற குறிக்கோளினை உடைய சபையினர், சமயச்சான்றோர்களை அழைத்துச் சமயச்சொற்பொழிவுகள் நடத்தி மக்களிடையே சைவ சமயம் தழைத்திடச் செய்து வருகின்றனர். சைவ சமயக் குரவர்களான நால்வருக்கும், காரைக்கால் அம்மையாருக்கும் தொடர்ந்து குரு பூசைகள் நடைபெற்று வருகின்றன. தற்பொழுது அப்பருக்குப் ப.சா.அழகப்பச் செட்டியாரும், சம்பந்தருக்குப் பழ.சிதம்பரம் செட்டியாரும், சுந்தரருக்குப் ப.சா.சிங்காரம் செட்டியாரும், மாணிக்கவாசகருக்குச் சித.பழநியப்பசெட்டியாரும், காரைக்கால் அம்மையாருக்குச் சா. அண்ணாமலை செட்டியாரும் குரு பூசைகள் நிகழ்த்தி வருகின்றனர். குருபூசையின்போது, நாயன்மார்களின் புராணங்கள் வாசிக்கப் படுகின்றன.

சைவ சமயத்தினை வளர்க்கும் எண்ணம் கொண்ட சபைப் பெரியோர்களும் பிறரும் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளனர். இவ்வறக்கட்டளைகளில் சைவச் செம்மல்களை அழைத்து வந்து சமயச் சொற்பொழிவாற்றிடச் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகின்றனர்.

சமுதாயப்பணிகள்

சபை தொடங்கப்பெற்ற நாள் முதலாகவே சமுதாயச் சீர்திருத்த நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பாமரர்கட்கு கேள்விச் செல்வம் வழங்குவதன் மூலம் சமுதாயத் தொண்டாற்றிய சன்மார்க்க சபை இன்று ஆலமரம்போலப் பரந்து வலுவாக வேரூன்றியுள்ளது. சபையின் கல்விப்பணிகள் காரணமாகக் கிராமப்புற மாணவமாணவியர்களின் வாழ்க்கையில் பொருளியல் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கல்லூரியில் செயல்படும் நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் மூலம் மாணவர்கள் பொதுமக்களுக்குப் பல்வேறு சேவைகள் செய்துவருகின்றனர்; குறிப்பாகக் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். கல்லூரி மாணவ மாணவியர் வழங்கிவரும் குருதிக் கொடையினால் (இரத்ததானம்), ஏழை எளிய மக்கள் பலரின் உயிர்கள் காப்பாற்றப் பெற்றுள்ளன. மாணவர்கள் வெறும் புத்தகப் புழுக்களாக முடங்கிவிடாமல் மாறிவரும் சமுதாயத்தின் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் வலிமை மிக்கவர்களாக உருவாக்கப்படுகின்றனர்.

இன்றைய தமிழ் மறுமலர்ச்சி எல்லாம் ஒரு நாள் பயிர் அல்ல. இன்றையத் தமிழர்களின் தனித் தொண்டுகள் அல்ல. நாம் சுவைக்கும் கனிகள் முன்னோர் விதைத்த விதையின் பயன்கள். இன்று தமிழ் பெற்று வரும் செல்வாக்கிற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர் வழிவகுத்த அறிஞர்கள் பலர் செய்த ஆக்கப் பணிகள் பல. அப்பணிகளுள் குறிப்பிடத்தக்கது சன்மார்க்க சபையின் பணி. தமிழகத்தில் அடிக்கடி வறட்சிக்கு இலக்காகும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராமச் சூழலில் வாழ்ந்து வரும் பலரின் வாழ்க்கையைச் சன்மார்க்க சபையின் சமுதாயப் பணிகள் ஒளிரச் செய்கின்றன. இதனால் சபையானது மாபெரும் விருட்சமாக ஓங்கி உயர்ந்துள்ளது.



